## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.

எ.மா.சா.2 நாள்: 15 .09.2025

வழக்கு எண் **MCOP No.196/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஸ்குமார் | ஊர் | : | எடப்பாடி |
| கணவர்/தந்தை பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தாலுகா | : | எடப்பாடி<br>சேலம் மாவட்டம் |
| தொழில் | : | கிளை மேலாளர்<br>இந்தியன் வங்கி,<br>திப்பம்பட்டி | வயது | : | 37 /2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2 ம் சாட்சியின் முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். செந்தில்குமாரின் முகவரி என்னவேன்றால் 4/15–4 கீழ்தெரு, குள்ளப்பநாயக்கனுர், பனமரத்துப்பட்டி, சேலம் மாவட்டம் ஆகும். அவருடைய வங்கி கணக்கு எண்.6566424092 ஆகும். என்னிடம் காட்டப்படும் காசோலை எண். 434656 என்று காட்டப்படும் காசோலை எங்கள் வங்கியில் இருந்து, செந்தில்குமாருக்கு வழங்கப்பட்ட காசோலை, எ.ம.ச.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த காசோலையை செந்தில்குமார் 2 எதிர்மனுதார் நிறுவனத்திற்கு 22.02.2020 ம் தேதி ரூ.56,122 க்கு வழங்கியுள்ளார். அந்த காசோலை வசூலுக்காக எங்களது வங்கியில் 27.02.2020 ம் தேதி செலுத்தப்பட்டது. அந்த காசோலைக்குரிய தொகை செந்தில்குமாரின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று, காசோலை திருப்பப்பட்டுள்ளது. செந்தில்குமார் என்பவரின் 27.02.2020 ம் தேதிய வங்கி

கணக்கு அறிக்கையின் கணினி நகல் எ.ம.ச.ஆ.7 ஆகும். அந்த காசோலை தமிழ்நாடு மெர்க்கண் வங்கியில் இருந்து காசோலைக்குரிய போதிய பணம் இல்லை என்று காரணத்தால் திருப்பப்பட்டுள்ளது. அவ்வாறு காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ எ.ம.ச.ஆ.8 ஆக குறிப்பிடப்படுகிறது. எனது பணியாளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்த்து குறியீடு செய்யப்படுகிறது. அது எ.ம.ச.ஆ.9 ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

காசோலை வழங்கிய செந்தில்குமாருக்கு எங்கள் வங்கியில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நபர்கள் அவர்களாகவே காசோலை வழங்குவார்களா அல்லது இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் வழங்குவார்களா என்றால் காசோலையை இன்சூரன்ஸ் கம்பெனிக்கு நேரடையாக கொடுத்து விடுவார்கள். கம்பெனி மூலமாக வசூல் செய்து கொள்வோம். செந்தில்குமார் வழங்கிய காசோலையை இன்சூரன்ஸ் கம்பெனி தான் எங்கள் வங்கிக்கு கொடுத்தது என்றால் சரிதான். செந்தில்குமார் வழங்கிய காசோலையை இன்சூரன்ஸ் கம்பெனி பெற்றுக்கொண்டு அவருக்கு பாலிசி வழங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. செந்தில்குமாரின் வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு உள்ளது என்பது மட்டும் தான் எங்களது வங்கியால் பார்க்க முடியும் என்றும் செந்தில்குமாருக்கு இன்சூரன்ஸ் கம்பெனி பாலிசி வழங்கிய விவரத்தை எங்களது வங்கியால் பார்க்க முடியாது என்றும் சொன்னால் சரிதான். எனது சாட்சியத்தை வைத்து 2 எதிர்மனுதாரர், மனுதாரர்க்கு இழப்பீடு வழங்க முடியாது என்று கூறுவது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் என்னால் சொல்லமுடியாது. எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்து கூறியதன் அடிப்படையில் 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.15 10:55:19 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**